ஸ்ரீ ஹரி :

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



ஸ்ரீ ஸ்வாமிகளின் ஜெயந்தி சிறப்பிதழ்


வேணு : 5 | நவம்பர் 1999 | கானம் : 4

# மதுரமுரளி

Registered as Newspaper in India

Registar of Newspapers for India
R. No. 62828/95

Regd. No. TN/Chief PMG - 3/99
WPP No. TN/Chief PMG - 4/99

வேணு : 5 | நவம்பர் 1999 | கானம் : 4




ப்ரஹ்மோத்ஸவத்தில் கருடவாஹனத்தில்
மாதுரிஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதன்


Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai 600 083 and Printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 174, Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar

ஸ்ரீ ஹரி:

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 5 நவம்பர் 1999 கானம் : 4

## விஷய ஸூசிகை

பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம் | 3 |
| 2. | மதுரமான மஹனீயர் - 48 | 5 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள் | 6 |
| 4. | வேத கதைகள் - 30 | 8 |
| 5. | எந்தரோ மஹானுபாவுலு - 18 | 10 |
| 6. | பாலகர்களுக்கு ஒரு கதை - 24 | 17 |
| 7. | பக்தி வேதாந்த ஸ்வாமி ப்ரபுபாதர் | 20 |
| 8. | ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 51 | 29 |
| 9. | செய்திகள் | 31 |
| 10. | நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள் | 31 |



ப்ரஹ்மோத்ஸவத்தில் நகர ஸங்கீர்த்தனத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள்.

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ குருஜியின் கீர்த்தனம்

ராகம் : ஆரபி | தாளம் : ஆதி

### பல்லவி

தவ நாமகீர்த்தனம் மம ஜீவனம்
தவ நாமகீர்த்தனம் லோக பாவனம் (தவ நாம)

### சரணங்கள்

காம ஜனக ஸ்ரீ க்ருஷ்ண
காம ரஹித ஸ்ரீ க்ருஷ்ண
ராம ஸஹோதர ஸ்ரீ க்ருஷ்ண
பாமா லோல ஸ்ரீ க்ருஷ்ண (தவ நாம)

வேணுவிலோல ஸ்ரீ க்ருஷ்ண
தேனு பாலக ஸ்ரீ க்ருஷ்ண
பானு ஸமான ஸ்ரீ க்ருஷ்ண
மீன ஶரீர ஸ்ரீ க்ருஷ்ண (தவ நாம)

வனமாலின் ஸ்ரீ க்ருஷ்ண
வனவிஹாரின் ஸ்ரீ க்ருஷ்ண
குண ஸம்பன்ன ஸ்ரீ க்ருஷ்ண
மனஆஹ்லாத ஸ்ரீ க்ருஷ்ண (தவ நாம)

நரஹரிரூப ஸ்ரீ க்ருஷ்ண
நரநாராயண ஸ்ரீ க்ருஷ்ண
ஸுரகண பூஜித ஸ்ரீ க்ருஷ்ண
வரமுரளீதர ஸ்ரீ க்ருஷ்ண (தவ நாம)



# 48

நாம் ஸாதனைகள் செய்து வரும் காலத்தில், ஸாதனைகள்தான் செய்து வருகின்றோமே என்ற அலக்ஷியத்தில் பலர் பல பாவ செயல்களை செய்து வருகின்றனர். ஆனால், அந்த பாவத்தின் பலனை அனுபவிக்க அப்பேர்பட்டவர்களும் பூமியில் யோக ப்ரஷ்டர்களாக பிறக்க நேரிடும் என்று கூறி அதை விவரித்து ஒரு அழகான ஸம்பவத்தை ஸ்ரீ ஸ்வாமிகள் கூறினார்கள். சுவையான ஸம்பவமாக இருப்பதால் உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என்பதற்காக இதை எழுதியுள்ளேன்.

ஒரு ஸமயம், ஸ்வாமி சிவானந்தர், ரிஷிகேஷ் ஆச்ரமத்தில் தங்கியிருந்த ஸமயம். எப்பொழுதும் மாலையில், ஸ்வாமி சிவானந்தர் தலைமையில் ஸத்ஸங்கம் நடக்கும். அந்த ஸத்ஸங்கம் நடக்கும் ஸமயத்திற்கு இரண்டு காட்டு நாய்கள், ப்ரவாஹமாக ஓடும் கங்கையை நீச்சல் அடித்து கடந்து வந்து ஸ்வாமிஜியின் பக்கத்தில் வந்து அமர்ந்து கொள்ளும். இரண்டு காட்டு நாய்களும் பார்ப்பதற்கு மாடுகள் அளவிற்கு பெரியதாகவும் பயங்கரமாகவும் இருக்கும். பார்ப்பவர்களுக்கு பயத்தை அளிக்ககூடியவைகளாக இருக்கும். ஆனால் யாருக்கும் எந்த தொந்தரவும் செய்யாது. மிகவும் ஸாதுவாக இருக்கும்.

ஒரு ஸமயம் ஸ்வாமி சிவானந்தரிடம் ஒரு பக்தர், இந்த நாய் ஜோடிகளின் நடத்தையை கண்டு வியப்புற்று வினவினார். அதற்கு அவர், ''ஜன்மாந்திரத்தில் இவர்கள் இருவரும் யோகிகளாக சேர்ந்து ஸாதனை செய்து வந்தார்கள். சில பாவங்கள் புரிய நேர்ந்ததால் இப்பொழுது இப்படி வந்து பிறந்துள்ளார்கள். பூர்வ ஜென்ம வாஸனையால் அவர்களுக்கு மஹான்களை தர்சிக்க வேண்டும் என்ற எண்ணமும், ஸாத்வீக குணமும், ஸத்ஸங்க ருசியும் அமைந்துள்ளது'' என்று கூறி அவர்கள் யோக ப்ரஷ்டர்கள்'' என்று திருவாய் மலர்ந்தருளினார்கள்.

(தொடரும்)

– ஜயந்தி ஜானகிராமன்

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள்

*கேள்வி : இப்பொழுது பல இடங்களில் 40 அடி, 50 அடி என்று ஸ்வாமி சிலைகளை ப்ரதிஷ்டை செய்து பூஜை செய்து வருகின்றார்களே!*

பதில் : ஸ்வாமி மூர்த்தி பெரியதாக இருப்பதால் நிறைய அருள் செய்வார் என்றோ, மூர்த்தி சிறியதாக இருந்தால் அருள் செய்யும் சக்தி அவரிடம் குறைவாக இருக்கும் என்றோ, ஒன்றும் அர்த்தம் இல்லை. மீரா தன்னுடைய கீர்த்தனத்தில், ''மூர்த்தி பெரியதாக இருந்தால் நிறைய அருள் புரிவார் என்று இருக்குமானால் நாம் ஏன் ஸாளக்ராமத்தை பூஜை செய்யவேண்டும். பேசாமல் பெரிய பெரிய மலைகளை பூஜை செய்யலாமே'' என்று அழகாக கூறியுள்ளார். ஆகவே, அர்ச்சாவதார மூர்த்திகளின் அருள் புரியும் சக்தி அதன் அளவுகளில் இல்லை. அதன் அருள் புரியும் சக்தி நம்முடைய விஸ்வாஸத்தில்தான் உள்ளது. எவ்வளவுக்கெவ்வளவு நம்மிடம் விஸ்வாஸம் உள்ளதோ அவ்வளவுக்கவ்வளவு மூர்த்திகளின் ஸாந்நித்யம் வெளிப்படும்.

*கேள்வி : நாம் ஸாதனை செய்யும் காலங்களில் நமக்கு பல விதமான ஸித்திகள் கைக்கூடும் என்று மஹாத்மாக்கள் கூறுகின்றனர். அதே ஸமயம், அவைகள் அநுபூதிக்கு தடை என்றும் கூறுகின்றார்கள். இறைவனை நோக்கி ஸாதனை செய்யும்பொழுது ஏற்படும் ஸித்திகளை ஏன் தடைகள் என்று தள்ளிவிட வேண்டும்?*

பதில் : பகவான் ராமக்ருஷ்ணர் இதற்கு அழகாக பதில் சொல்வார். ''ஒருவன் ஆகாரம் சாப்பிடுவது உடல் ஆரோக்கியத்திற்காகத்தான். அதே ஸமயத்தில், மலமும் வெளிவருவது தவிர்க்கமுடியாதது. மலம் வெளி வருவதற்காகத்தான் ஒருவர் உணவு உட்கொள்கிறார் என்று சொன்னால் எவ்வளவு அபத்தமோ, அவ்வளவு அபத்தம் ஸித்திகளுக்காக ஸாதனை செய்வது என்பது''.

*கேள்வி : என்னை ஒருவர் தன்னை குருவாக ஏற்று கொள்ளும்படி நிர்பந்தப்படுத்துகின்றார். நான் அவரை குருவாக ஏற்று கொள்ளட்டுமா!*

பதில் : அது தங்களுடைய தனிப்பட்ட விருப்பம். ஆனால் சீடர்கள் குருவை தேடிய காலம் மாறி இப்பொழுது பல குருமார்கள் சீடர்களை தேடி அலைகின்றார்கள்.

*கேள்வி : கலியில் எல்லோருக்கும் நாமஸங்கீர்த்தனம்தான் வழியா அல்லது இதில் பாகுபாடு உண்டா?*

பதில் : இரவில் கண் தெரியாது என்பது எல்லா மனிதர்களுக்கும் பொருந்தும். சிலருக்கு இரவில் கண் தெரியும், சிலருக்கு தெரியாது என்பதில் எப்படி பாகுபாடு இல்லையோ, அதுபோல் கலியில் எல்லோருடைய சித்தமும் கல்மஷமாக இருக்கும். இதில் எந்த பாகுபாடும் இல்லை. எல்லோருக்கும் நாமகீர்த்தனம்தான் கதி.

*கேள்வி : ஒரு முறை நாமாவை சொன்னால் போதும் என்கிறீர்களே, பிறகு ஏன் பலமுறை கூறவேண்டும்?*

பதில் : ஒரு முறை சொல்வது என்பது நாம மஹிமையை சொல்ல வந்த விஷயம். பலமுறை சொல்வது என்பது ஸாதனையை பற்றிய விஷயம்.

*கேள்வி : அவதார புருஷர்கள், ஜீவன்முக்தர்கள், இவர்களில் வித்யாசம் உண்டா?*

பதில் : ஜீவன்முக்தர்கள் எல்லோரும் அவதார புருஷர்களாக இருக்க வேண்டிய அவச்யம் இல்லை. ஆனால், அவதார புருஷர்கள் ஜீவன் முக்தர்களாகதான் இருப்பார்கள். இதைத் தவிரவும் அவர்களிடம் ஈஶ்வர அம்சம் என்பது தனிப்பட்ட முறையில் வெளிப்படும்.

To know more about mission activities and satsang events visit : http://members.tripod.com~madhuramurali

The Spiritual Magazine “Madhura Murali” is also available on Web : http://www.madhramurali.org

# வேத கதைகள் - 30

- தர்மஜ்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேஶ ஶாஸ்த்ரிகள்

## வ்ருத்ராஸுரனின் விஷமம்

வேதங்களில் வ்ருத்ராஸுரனைப் பற்றி பலவிதமாக கூறப்பட்டுள்ளது. த்வஷ்டா என்ற தேவதச்சனின் பிள்ளையாக வ்ருத்ராஸுரன் பிறந்தான் என்றும் விளக்கமாக கூறப்பட்டுள்ளது. வ்ருத்ரன் என்றால் மேகம். இந்த்ரன் அதை பிளந்து மழையை உண்டுபண்ணுகிறான் என்று ரிக்வேதம் கூறுகிறது. வ்ருத்ராஸுரனின் வரலாறு இரண்டாவது காண்டம் ஐந்தாவது ப்ரபாடகத்தில் விரிவாக கூறப்பட்டுள்ளது. அதை ஒரு தனி கட்டுரையாகவே முன்பு எழுதி வெளியாகி இருக்கிறது. இந்த்ரன் ததீசீ என்ற முனிவரின் முதுகு எலும்பால் செய்யப்பட்ட வஜ்ரம் என்ற ஆயுதத்தால் வ்ருத்ராஸுரனைக் கொன்றான். அப்பொழுது வ்ருத்ராஸுரனின் உடலிலிருந்து மிகவும் கோபத்துடன் பதினாறு உடல்கள் இந்த்ரனை சூழ்ந்து கொண்டனர். வஜ்ராயுதத்தால் அடித்தும் உயிர் போகாத வ்ருத்ரன், தன் உடலிலிருந்து உண்டான பதினாறு உடல்களை பாம்புகளாக ஆக்கினான். கயிறுகளால் மனிதனை கட்டுவதுபோல் அந்த பாம்பு உருவம் கொண்ட தன் உடல்களால் இந்த்ரனை கட்டினான்.

பிறகு அந்த வ்ருத்ராஸுரனின் தலையிலிருந்து சில பசுக்கள் உண்டாயின. அந்த பசுக்களும் தனிப்பட்ட முறையில் உயர்ந்த அங்கங்கள் உள்ளதாக விளங்கியது. அந்த பசுக்களில் பின் பாகத்தில் ஒரு காளையானது தொடர்ந்து சென்றது. அப்பொழுது அந்த காளையை உத்தேசித்து இந்த்ரன் தன் உருவத்தையே பூஜித்துக்கொண்டான். என்னுடைய செயலானது பலனை அளித்தது என்றும் எண்ணினான். அப்பொழுது இந்த்ரன் தன் மனதால் ஒரு தீர்மானம் செய்துகொண்டான். எவன் ஒருவன், யாகம் செய்ய தகுதி பெற்றவனாக இருந்து ஒரு காளையை, தேவதையை உத்தேசித்து யாகம் செய்கிறானோ அவன் கட்டுதல் முதலிய துன்பங்களிலிருந்து விடுபடுகிறான் என்று தீர்மானித்து அந்த யாகத்தை இந்த்ரனும் செய்தான்.

இந்த்ரன் செய்த இந்த யாகத்தால் மகிழ்ச்சி அடைந்த அக்னி தனக்கு அளிக்கப்பட்ட பாகத்தை ஏற்று, வ்ருத்ரனால் உண்டு பண்ணப்பட்ட பாம்பு உருவமுள்ள பதினாறு உடலையும், வ்ருத்ராஸுரனையும் எரித்தான். இவ்விதம் வ்ருத்ராஸுரனை ஒழித்த இந்த்திரன், தன்னிடம் ஒரு திறமையை நிலை நிறுத்திக்கொண்டான்.

பிறகு பலன் என்ற ஒரு அஸுரன் திருடனாக ஆகி பல இடங்களில் அலைந்து பல பசுக்களை கவர்ந்து பூமியில் ஒரு பொந்தில் அடைத்து வைத்தான். இதை அறிந்த இந்த்ரன், குகையின் வாயிலை அடைத்து ஒரு பாறையை இறக்கினான். பிறகு அந்த குகையில் இருந்த பசுக்களில் ஒரு உயர்ந்த பசுவை பின் பகுதியில் பிடித்து உயர்த்தி வெளியேற்றினான். அந்த பசுவானது மாட்டு மந்தைக்கு தலைவனாக இருந்ததால் அதை இந்த்ரன் வெளியேற்றிய உடன், அதை பின்பற்றி பலன் என்ற அரக்கனால் அடைக்கப்பட்ட ஆயிரக்கணக்கான பசுக்களும் வெளியேறின. இயற்கையாகவே உயர்ந்ததான அந்த பசு இந்த்ரன் தூக்கியதால் மிகவும் உயர்ந்ததாக ஆயிற்று. இவ்விதம் உயர்ந்ததான பசுக்களின் ஆயிரமானது செல்வத்தின் அடையாளம். பசுக்கள் நிரம்பியிருந்தால் அது லக்ஷ்மியின் அடையாளம் என்று ராமாயணத்தில் கூறப்பட்டுள்ளது. ''வித்யதே கோஷு ஸம்பந்நம்'' என்று விபீஷணர் ஶரணாகதி ப்ரகரணத்தில் வால்மீகி விவரணம் செய்துள்ளார். இந்த வேதக் கதைகளை பின்பற்றியே இந்த்ரனுக்கு ''வ்ருத்ர: பலாராதி'' என்ற பெயர் ஏற்பட்டது.

## நாம ஸங்கீர்த்தனம்

ஸ்ரீ ஸ்வாமிகளின் ஆக்ஞையின் பேரில், ஒரு நாமஸங்கீர்த்தன இளைஞர் குழு ஒவ்வொரு வீடாகச் சென்று ''ஹரி நாமஸங்கீர்த்தனம்'' செய்ய சித்தமாக உள்ளது.

''ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே''

என்னும் கலியை நாசம் செய்ய வல்லமை படைத்த மந்த்ரம் ஜபிக்கப்படும்.

இந்த நாமஸங்கீர்த்தனம், தங்கள் வீடுகளில் செய்ய விருப்பம் உள்ளவர்கள், தங்களின் பெயர், முழு விலாசம், நடத்த விருப்பமுள்ள தேதி, நேரம் (காலை அல்லது மாலை) என்கிற விபரங்களை முன் கூட்டியே கடிதம் எழுதி அதன் உறை மீது ''நாம ஸங்கீர்த்தனம்'' என்று எழுதி மிஷன் முகவரிக்கு அனுப்பவும். கடிதம் மூலம் மட்டுமே தொடர்பு கொள்ளவும். தொலைபேசி மூலமாகவோ நேரிலோ ஸ்ரீ ஸ்வாமிகளை தொடர்பு கொள்வதைத் தவிர்க்கவும்.

# எந்தரோ மஹானுபாவுலு - 18

ராமானுஜரது ப்ரஸாதத்தை உண்டமாத்திரத்திலேயே தீய எண்ணங்கொண்ட வைஶ்யன் மனம் திருந்தி உடையவரது சீடராக மாறினார் என்று சென்ற இதழில் பார்த்தோம். யதிராஜரின் இந்த எல்லையற்ற ஆன்மீக சக்தியைக் கண்டு சீடர்கள் அவரிடம் பின்னும் அதிகமாக பக்தி செலுத்தலானார்கள்.

யதிராஜரின் பணக்கார சீடரான யஜ்ஞேஶர் ராமானுஜரது வருகைக்காக நெடுநேரம் காத்திருந்தார். பின்பு அவர் ஏழை வரதாசாரியாரின் விருந்தை ஏற்றுள்ளதாக அறிந்து பதற்றமுற்று, தான் ஏதோ அபச்சாரம் செய்துவிட்டோம் என உணர்ந்து ஏக்கமுற்று விரைந்து சென்று ராமானுஜரது திருவடிகளில் வீழ்ந்து வணங்கி கண்ணீர் பெருக்கலானார். ராமானுஜர், அவரை அன்புடன் தூக்கி எடுத்து, ''உன் விருந்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை என வருந்துகிறாயா?. நான் வரும் செய்தியை உனக்குத் தெரிவித்த இரு சீடர்களையும் நீ உபசரிக்கத் தவறிவிட்டாய். அவர்களுக்கு அருந்த நீரோ, உண்ண உணவோ அளிக்க மறந்துவிட்டாய். இந்த வைணவர்கள் தொண்டைவிட பெரிய தர்மம் வேறொன்றும் இல்லை. நீ இப்படி பாகவத அபசாரம் செய்ததால், நான் ஏழை வரதாழ்வான் வீட்டு விருந்தை மனமுவந்து ஏற்றேன்'' என்றார்.

இதைக் கேட்டு யஜ்ஞேஶர், ''தேவரீர் எழுந்தருளுகிறீர் என்ற பெரிய ஆனந்தத்தில், அடியேன் வைணவ கைங்கர்யத்தை மறந்து தவறு இழைத்து விட்டேன். தயை செய்து பிழை பொறுத்தருளவேண்டும்'' எனக்கூறி அழலானார். தன் குற்றத்தை உணர்ந்த நேர்மையான உள்ளமுள்ள அந்த பக்தரையும் ராமானுஜர் தேற்றி திருமலையிலிருந்து திரும்பும்பொழுது அவரது விருந்தை ஏற்பதாக வாக்களித்து ஸந்தோஷப்படுத்தினார். யஜ்ஞேஶனை மன்னித்துவிட்டு உடையவர் துரிதமாக பயணம் செய்து, காஞ்சியை அடைந்து திருக்கச்சிநம்பியின் திருமாளிகைக்குச் சென்று அவரை தெண்டனிட்டு நின்றார். பிறகு திருக்கச்சிநம்பியுடன் வரதராஜரை தரிசித்தார். திருக்கச்சிநம்பியிடம் திருமலைக்குச் செல்ல அனுமதி பெற்றுக் கொண்டு ஏழுமலையானை ஸேவிக்கவேண்டுமென்ற ஆசையால் துரிதமாக பயணத்தை தொடர்ந்தார்.


திருமலையை அடைந்த ராமானுஜர் பேரானந்தம் அடைந்தார். பூலோக வைகுண்டமாக அந்த பூமியை அவர் நெடுநேரம் கண் கொட்டாமல் பார்த்தார். கண்களில் ஆனந்தக் கண்ணீர் அருவியாக சொரிந்தது. அவருக்கு அந்த மலையே ஸ்ரீமந் நாராயணனும் திருமகளுமாக தெரிந்ததால், தனது ப்ராக்ருத ஶரீரத்துடன் இதனை மிதித்து

எவ்வாறு ஏறி மேலே செல்வது என்று வருந்தி திருமலையின் அடிவாரத்திலேயே தங்கிவிட்டார். சீடர்கள், ‘‘இதற்காகவா இத்தனை தூரம் வந்தோம்’’ என்று வருத்தத்துடன் வினவ, அதற்கு உடையவர், ‘‘இங்கு வந்த பத்து ஆழ்வார்களும் திருமலையை ஆதிசேஷனாக பாவித்து, அவர்மீது தங்கள் திருவடியை வைக்க விரும்பாமல் கீழேயே தங்கிவிட்டனர். நான் என்ன ஆழ்வார்களை விட உயர்ந்தவனா?’’ என்று பதில் சொன்னார்.

ராமானுஜரது தீர்மானத்தை கேள்வியுற்ற அந்த நாட்டு அரசன் விட்டலதேவன், தன் பரிவாரங்களுடன் அவரை தரிசிக்க வந்தான். ராமானுஜரது திவ்ய தேஜஸில் விருப்புற்று, அவனும் அவரது சீடராக மாறினான். ராமானுஜரும் மனம் மகிழ்ந்து அவனை ஏற்றுக்கொண்டு ஸமாச்ரயணம் செய்வித்து தமது சீடனாக்கிக்கொண்டார். இளமண்டியம் என்ற ஊரை அரசன் ஆசாரியனுக்கு காணிக்கையாகக் கொடுத்தான்.

திருமலையில் வாழ்ந்த ஸாதுக்களும் முனிவர்களும் ராமானுஜர் வந்திருப்பதை அறிந்து அவரைக்காண வந்தனர். தம் திருவடிகளைப் பதித்து மலைமேல் ஏறலாகாது என்று யதிராஜர் நிச்சயத்திருப்பதை அறிந்த அனந்தாழ்வானும் மலையிலிருந்து இறங்கி வந்து அவரை தெண்டனிட்டு, ‘‘பெருமாள் உங்களுக்காக காத்திருக்கிறார்’’ என்றார். ராமானுஜர் தமது அபிப்ராயத்தை கூறியதும் அனந்தாழ்வான், ‘‘தேவரீரே மலைமேல் ஏறவில்லை என்றால் நான் மட்டும் மலையில் நடக்கலாமா? தாங்கள்தானே என்னை நந்தவனம் அமைக்க அனுப்பினீர். மேலும் தேவரீர் போன்ற மஹான்கள் மலை ஏறி வராவிட்டால், அதை அனுஸரித்து, யாரும் மலைக்கு வரமாட்டார்காள். பிறகு அங்கு கோவில் இருந்து என்ன பயன்?’’ என்று வினயமாக கூறினார். ஸ்ரீராமானுஜர் சிறிது நேரம் சிந்தித்து, ‘‘எம்பெருமான் திருவுள்ளம் அப்படியானால் நாம் வருகிறோம்’’ என்று மறுநாளே மலை ஏற முற்பட்டார்.

பாதிதூரத்திலேயே அவரை தீர்த்த ப்ரஸாதங்களுடன் பெரிய திருமலைநம்பி எதிர்கொண்டார். மாமுனிவரான அவர் தமக்காக ப்ரஸாதம் எடுத்துக்கொண்டு வந்திருப்பது கண்டு மனமிளகிய யதிராஜர், ‘‘தேவரீருக்குப் பொருந்தாத இந்த செயலை ஏன் செய்கிறீர்கள்? அடியேனைப்போன்ற அற்பத்தொண்டனுக்காக உங்களைப் போன்ற பெரிய ஆசார்யர் இப்படி சிரமத்தை ஏற்கவேண்டுமா? யாராவது சேவகனிடம் கொடுத்து அனுப்பக்கூடாதா? என்று வினவினார். அதற்கு பெரியதிருமலைநம்பி, இந்த மலைமுழுவதும் அப்படி ஒரு சேவகனைத் தேடினேன். என்னைவிட சிறிய சேவகன் எனக்கு அகப்படவில்லை.



ஆதலால் தான் நானே வந்தேன்'' என்றார்.

அவரது பணிவை எண்ணி ராமானுஜர் வியப்புற்றார். திருமலை நம்பியின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். ப்ரஸாதத்தை உண்டு களைப்பு நீங்கியதும் மறுபடி பயணத்தைத் தொடர்ந்து திருவேங்கட முடையானின் கோவிலுக்கு வந்து சேர்ந்தார். கோவிலை வலம் வந்து வேங்கடவனை ஸேவித்தார். கண்ணீர் பெருக தன் புறஉலக நினைவை அடியோடு இழந்தார். வெகுநேரம் கழித்து சுயநினைவு பெற்றதும் கோவில் அர்ச்சகர்கள் அளித்த ப்ரஸாதங்களைப் பெற்றுக்கொண்டார். பெரிய திருமலைநம்பி, திவ்யதேசங்களில் மூன்று நாட்கள் தங்கிச் செல்ல வேண்டும் என்ற விதி இருப்பதாக கூறியதால் மலைமேல் மூன்று நாள் தங்கி தினமும் பெருமாளை விடியற்காலையில் ஸேவித்து நான்காம் நாள் புறப்பட்டு கீழிறங்கினார். ராமானுஜர், பெரியதிருமலை நம்பியின் திருமாளிகையில் ஓராண்டு காலம் தங்கினார். அவரிடம் ஸ்ரீமத் ராமாயண மஹாகாவ்யத்தின் பாடம் கேட்டு அறிந்துகொண்டார்.

திருக்காளஹஸ்தியிலிருந்து பெரியதிருமலைநம்பியால் மீட்டுக் கொண்டுவரப்பட்ட தமது ஒன்றுவிட்ட தம்பியான கோவிந்தன், பரமபாகவதனாக மாறி பெரியதிருமலைநம்பிக்கு விசேஷமாக கைங்கர்யம் செய்துவருவதைப் பார்த்து, ராமானுஜர் மிகவும் ஆஸ்சர்யப்பட்டார். ஒருநாள், அவன், பெரியதிருமலைநம்பி படுக்க மெத்தை விரித்துவிட்டு, அதில் முதலில் தான் படுத்து உருண்டு போவதைக்கண்ட உடையவர், அதை பெரியதிருமலைநம்பியிடம் தெரிவித்தார். நம்பியும் கோவிந்தனை அழைத்து விசாரித்தார். ''மகனே! நீ என் படுக்கையில் படுத்துக் கொள்கிறாயா? குருவின் படுக்கையில் படுத்துக் கொள்பவனுக்கு மீளா நரகம் கிடைக்கும் என்பதை அறிவாயா? ''என்று கேட்டார்.

இதற்கு கோவிந்தன் அமைதியாக, ''நான், ஆசார்யன் படுக்கையில் படுப்பதன் விளைவை அறிந்தும் இப்படி ஏன் செய்கிறேன் தெரியுமா? ஆசார்யன் நித்திரை கொள்வதற்கு ஏற்றவாறு பூச்சி பொட்டு இல்லாமலும், உறுத்தல் இல்லாமலும் இருக்கிறதா என்று சோதித்துப் பார்க்கத்தான். இதனால் எனக்கு நரகம் கிடைத்தாலும் அது ஸ்வர்கத்துக்கு ஸமம்'' என்றார். கோவிந்தனது குருபக்தியை கண்டு யதிராஜர் வியப்படைந்தார். அவனை தவறாக எண்ணியதற்காக அவனிடமே மன்னிப்பு வேண்டினார். இன்னொரு ஸமயம் கோவிந்தன் ஒரு விஷப்பாம்பின் வாயில் கைவிட்டு சிறிதும் நேரம் கழித்து கையை எடுத்து விட்டு வந்ததைப் பார்த்து கோவிந்தனிடம், ''இதென்ன ஸாஹஸம்?

விஷப்பாம்பின் வாயில் கையை விடுவது முட்டாள்தனமில்லையா?'' என்று கேட்க, அதற்கு கோவிந்தன், ''இந்தப் பாம்பு, தொண்டையில் முள்குத்தி வலியால் தவித்துக்கொண்டு இருந்தது. அதை நீக்கியதால் இப்பொழுது ஸுகமடைந்து இருக்கிறது'' என்று சொன்னதும் கோவிந்தனது ஜீவகாருண்யத்தைக்கண்டு உடையவர் ஆஶ்சர்யம் அடைந்தார்.

ஓராண்டு முடிந்ததும் ராமாயண பாடமும் முடிந்தது. பிறகு ராமானுஜர் ஸ்ரீரங்கத்திற்குக் கிளம்ப முடிவு செய்தார். பாம்புக்கு வைத்தியம் பார்க்கும் அளவு கருணையுடைய கோவிந்தனை தன்னுடன் அழைத்துச் செல்ல ஆசைக்கொண்டார். ஆனால் பெரியதிருமலைநம்பிக்கு கோவிந்தன் செய்து வரும் அசாதாரண கைங்கர்யத்திலிருந்து மீட்டு எப்படி அழைத்துச் செல்வது என்றும் நினைத்தார். அப்போது பெரியதிருமலைநம்பி தமது மருமகனும் மஹாஞானியுமான ராமானுஜரைப் பார்த்து, ''ராமானுஜா! என் குழந்தாய்! உனக்கு ஏதாவது விருப்பம் இருந்தால் கூறு. என்னால் முடியுமென்றால் அவசியம் நிறைவேற்றி வைக்கிறேன்'' என்றார். உடனே ராமானுஜர், ஸ்வாமி! தாங்கள் அடியேனுக்கு உங்களது தெய்வீகச் சீடனான கோவிந்தனை தந்தருளினால் நான் தன்யனாவேன்'' என்றார். சிறிதும் தயங்காமல் பெரியதிருமலைநம்பி தமது ப்ரியமுள்ள சீடரான கோவிந்தரை ராமானுஜருக்கு தந்தருளினார். ராமானுஜரும் கோவிந்தரைப் பெற்று எல்லையில்லா மகிழ்ச்சி அடைந்தார்.

பிறகு ராமானுஜர் பெரியதிருமலைநம்பியை ஸாஷ்டாங்கமாக வணங்கி கோவிந்தனையும் அழைத்துக்கொண்டு ஸ்ரீரங்கம் நோக்கித் தமது பரிவாரங்களுடன் புறப்பட்டார். வழியில் உள்ள அனைத்து திருத்தலங்களையும் ஸேவித்து பெருமாளுக்கு மங்களாஸாஸனம் செய்தார். சோளசிம்மபுரத்து (சோளிங்கர்) அக்காரக்கனிப்பெருமாள், திருப்புட்குழியிலுள்ள திருவனந்தாழ்வான், மரகதவல்லித்தாயார், திருவெஃகாவிலுள்ள சொன்னவண்ணம் செய்தபெருமாள் ஆகியோரை ஸேவித்து காஞ்சி வந்தடைந்து திருக்கச்சிநம்பியின் இல்லத்துக்கு வந்தார். இத்தனை திவ்யக்ஷேத்ர யாத்திரைகளிலும் கோவிந்தன் எதிலும் ஒட்டாமல், மகிழ்ச்சியின்றி சோர்ந்து காணப்பட்டதைக் கண்ட உடையவர், அவனது சோகத்துக்கு காரணம் பெரியதிருமலைநம்பியிடமிருந்து பிரிந்ததே என்று ஊகித்து உடனே கோவிந்தனை திருமலைக்குச் சென்று பெரிய திருமலைநம்பியிடம் போய்ச் சேருமாறு அனுமதி அளித்தார்.

கோவிந்தரும் வெகுவேகமாக திருமலையை அடைந்து பெரியதிருமலைநம்பியின் திருமாளிகையை அடைந்தார். கோவிந்தர் வந்ததை சீடர்கள் வாயிலாக கேட்ட நம்பி, உள்ளிருந்து வெளியே வரவே இல்லை, அவரை உணவு உண்ணவும் உள்ளே அழைக்கவில்லை. மாறாக சீற்றம் கொண்டு, ''அவனை யார் இங்கு அழைத்தார்கள், போகச் சொல்லுங்கள்'' என்று இரைந்தார். அவரது மனைவி, ''இத்தனை தூரம் பயணம் செயது களைத்து வந்த குழந்தையை உள்ளே அழைத்து உணவளிக்காமல் போகச் சொல்கிறீர்களே! இதென்ன நியாயம்'' என்று மருமானுக்காக பரிந்து பேசினாள். உடனே நம்பி, அடி பைத்தியக்காரி ! யாராவது விற்ற மாட்டுக்கு புல் அளிப்பார்களா! யாரிடம் விற்றோமோ அவனல்லாவா பராமரிக்கவேண்டும். கொடுத்ததை திருப்பிப்பெரும் வழக்கம் ஸ்ரீவைஷ்ணவனிடம் கிடையாது. அவனைப் போகச் சொல்! என்று நிஷ்டூரமாக இரைந்து பேசினார்.

இதை வாயிலில் நின்றிருந்த கோவிந்தனும் கேட்க, உடனே அவர் சிறிதும் தாமதம் செய்யாமல் அங்கிருந்து புறப்பட்டு நேரே காஞ்சியை அடைந்து, உடையவர் சரணத்தில் அடைக்கலம் புகுந்தார். ராமானுஜரின் திருவடிகளைப் பற்றிக்கொண்டு, ''யதிராஜரே! இனி அடியேனுடைய ஆசாரியர் தேவரீர்தான் என்று எனது முந்தய ஆசாரியர் கூறக்கேட்டேன். அடியேனை ஏற்கவேண்டும்'' என்றார். நெடுந்தூரம் நடந்து களைத்து வந்துள்ள கோவிந்தரை முதலில் குளித்து உணவருந்த வைத்து, பிறகு தனது அன்பான சீடராக ஏற்றார். பிறகு திருக்கச்சிநம்பியிடம் விடைபெற்றுக் கொண்டு அனைவரும் ஸ்ரீரங்கம் வந்தடைந்தனர்.

கோவிந்தரும் தம்மை ராமானுஜரிடம் ஒப்படைக்கவே பெரிய திருமலைநம்பி அவ்விதம் கடுமையாக நடந்துகொண்டார் என்று உணர்ந்து கொண்டு ராமானுஜரிடம் ஈடுபாட்டுடன் தொண்டாற்றலானார். அவரது குரு ஸேவையைக் கண்டு அனைவரும் வியந்து போற்றினர். கோவிந்தரது விரக்தி மனப்பான்மை, எல்லோரையும் வியக்கவைத்தது. ஒருநாள் காலை, கோவிந்தன் ஒரு தாசி வீட்டு வாயிலில் வெகுநேரம் நிற்கக் கண்டு சில ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸ்ரீராமானுஜரிடம் இதுபற்றி தெரிவித்தனர். உடையவர் கோவிந்தனை அழைத்து விசாரித்தார். உடனே கோவிந்தன், ''ஸ்வாமி நான் அங்கு நின்றதுண்டு. தேவரீரைப் பற்றிய பாட்டு மிக மதுரமான குரலில் உள்ளிருந்து கேட்டது. அதில் லயித்து நின்றுவிட்டேன்'' என்றார். புகார் செய்தவர்களும், ''ஆம்! பாட்டு கேட்டது'' என்றனர். அவரது ஸுத்தமான பக்தியைக் கண்டு ஸ்ரீராமானுஜர் வியந்தே போனார்.

இன்னுமொரு நிகழ்ச்சி இவரது அசாதாரண மன நிலைமையைக் காட்டுகிறது. கோவிந்தனின் தாயார், ஒரு ஸமயம் உடையவரிடம் வந்து கோவிந்தன் தன் மனைவியை ஏறெடுத்தும் பாராமல் வாழ்வது பற்றி

புகார் செய்ய, உடனே அவர் கோவிந்தனை அழைத்து, ''கோவிந்த பெருமாளே! உமது மனையாளிடம் போம்! இது எமது ஆணை'' என்று கட்டளை இட்டார். உடையவர் பேச்சுக்கு மறுப்பே சொல்லாத கோவிந்தனும் ஒப்புக்கொண்டார். கோவிந்தனின் தாயாரும் மகிழ்ந்து மருமகளை அலங்கரித்து கோவிந்தனின் அறைக்கு அனுப்பிவைத்தாள். கோவிந்தனோ இரவு முழுவதும் அவளுக்கு பகவானுடைய ப்ரபாவங்களை எடுத்துரைத்து, வேதாந்த பேச்சுகளில் நேரத்தைக் கழித்தார்.

கோவிந்தனின் தாய் தீப்திமதி தன் மருமகள் வாயிலாக இந்த விஷயம் பற்றி அறிந்து அதை ராமானுஜரிடம் முறையிட, யதிராஜர் மீண்டும் கோவிந்தரை அருகில் அழைத்து, ''நான் உன்னை இல்லறக்கடமையை காக்கச் சொன்னேன். நீ ஏன் அதன்படி நடக்கவில்லை'' என்று கேட்டார். அதற்கு கோவிந்தன், ''எந்நேரமும் அர்தர்யாமியான பகவான் என்னுடன் இருக்கிறான். அவனது ஒளிவீச்சில் எப்போதும் ப்ரகாசமாக இருக்கிறது. எனக்கு தனிமையும், இருளும் எப்போதும் அமையவில்லை. எனவே என்னால் இல்லற வாழ்வில் ஈடுபட இயலவில்லை'' என்றார். இதைக் கேட்ட ராமானுஜர், கோவிந்தன் துறவு வாழ்க்கைக்குத்தான் ஏற்றவர் என்றுணர்ந்து, அவருக்கு ஸன்யாஸம் அளித்து பஞ்சஸம்ஸ்காரம் செய்வித்து அவரை பரமஹம்ஸராக உயர்த்தினார். ஸுத்த ஞானமும், பக்தியுமே வடிவானவராக அவர் இருந்ததால் யதிராஜர் கோவிந்தனுக்கு எம்பெருமானார் என்று தனது திருநாமத்தையே சூட்ட அதை கோவிந்தன் ஏற்க தயங்கியதால் அந்த நாமத்தை சுருக்கி, எம்பார் என்று பெயரிட்டார்.

எம்பார், முதலியாண்டான் ஆகியோர் ராமானுஜரது உறவினராக இருந்தும் அந்த பந்தபாசங்கள், உடையவரை சிறிதும் பீடிக்கவில்லை. அவரது சீடர்களும் அவரைப் போலவே பரம விரக்தர்களாய் அஹங்காரம், மமகாரமற்று தங்களது ஆஶ்ரமத்துக்குத்தகுந்த வாழ்க்கையை நடத்தி வந்தார்கள். இப்படி உயர்ந்த சீடர்களால் ஸ்ரீவைஷ்ணவ ப்ரபாவம் எங்கும் கீர்த்தியுடன் பரவியது. ஸ்ரீராமானுஜருடைய ப்ரபாவத்துக்கு சிறிதும் குறைவில்லாமல் அவரது சீடர்களுடைய ப்ரபாவமும் இருந்தது. இனி அவரது முக்கிய சீடர்களின் ப்ரபாவத்தை விளக்கும் சில நிகழ்ச்சிகளைப் பார்ப்போம்.

(தொடரும்)

- ஜயந்தி ஜானகிராமன்

# பாலகர்களுக்கு ஒரு கதை - 24

ஒரு காலத்தில், அகண்டமான ராஜ்ய மண்டலத்தை ஒரு மஹாராஜா ராஜ்ய பரிபாலனம் செய்துவந்தான். எப்பொழுதுமே ராஜபதவி என்பதற்கு, வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு, மிகவும் ஆனந்தத்தை கொடுப்பதை போல் தோன்றும். ஆனால், அந்த பதவியில் இருந்து ராஜ்யத்தை நிர்வகித்து வருபவர்களுக்கு நிம்மதி என்பதே இருக்காது. ஒரு சிறிய குடும்பத்தை நிர்வாகம் செய்வதிலேயே அநேகருக்கு பல சிரமங்கள் உள்ளன. அதைவிட ஒரு பெரிய ஸ்தாபனத்தை நிர்வாகம் செய்வது என்பது மிகவும் சிரமம். இப்படியிருக்கையில், ஒரு பெரிய நாட்டையே நிர்வாகம் செய்துவரும் ராஜாவிற்கு எவ்வளவு சிரமங்கள் இருக்கும்! காலையில் எழுந்ததிலிருந்து இரவு துயில்கொள்ளும்வரை ஓயாத கார்யங்கள் இருக்கும்.

அரசியல் ப்ரச்சனைகள், எதிரிகளின் தொல்லைகள், நாட்டுமக்களின் நலனை உத்தேசித்து செய்யவேண்டிய கார்யங்கள், நீதித்துறையில் கவனிக்க வேண்டிய விஷயங்கள், அரசு வருமானத்தை பெருக்க வழிதேடுதல், வேட்டையாடுதல், உடற்பயிற்சி செய்தல், படைகளுக்கு பயிற்சியளித்தல், தன்னுடைய சுற்றங்களை ஸந்தோஷமாக வைத்துக் கொள்ளுதல், இறைபணியில் ஈடுபடுதல், மேலும் மேலும் அறிவை பெருக்கிக்கொள்ள வேண்டி விஷயங்களை கற்றல், மேலும் இது போன்ற விஷயங்கள் ஒரு மஹாராஜா அன்றாடம் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டியவை. இரவு படுத்தாலும் நிம்மதியாக தூக்கம் வராது.

தினமும் மஹாராஜாவிற்கு சிகையலங்காரம் செய்வதற்காக ஒரு நாவிதர் அதிகாலையில் அரண்மனைக்கு வருவார். அவரைப் பார்க்கையில், மஹாராஜாவிற்கு மிகவும் ஆஶ்சர்யமாக இருக்கும். ''இவ்வளவு பெரிய அகண்ட மண்டலத்திற்கு பூபாலனாக இருந்தும் நமக்கு சற்றும் நிம்மதியோ, ஸந்தோஷமோ இல்லை. ஆனால் இந்த நாவிதரால் இவ்வளவு நிம்மதியாக எப்படித்தான் இருக்க முடிகின்றது'' என்று நினைத்து மஹாராஜா ஆஶ்சர்யம் அடைந்தான். நாளுக்கு நாள் அந்த நாவிதரை கண்டு மஹாராஜாவிற்கு பொறாமையாகவே ஆகிவிட்டது.

ஒரு ஸமயம், மஹாராஜா மந்திரியுடன் பேசிக் கொண்டிருக்கையில், ''எப்படியாவது அந்த நாவிதரின் நிம்மதியைக் குலைத்துவிடவேண்டும். அதற்கு ஏதாவது வழி உள்ளதா?'' என்று ஆலோசனை கேட்டான். மந்திரியும், கவலை கொள்ளவேண்டாம். நான்



கூடிய விரைவில் நாவிதரின் நிம்மதியை குலைத்துவிடுவேன் என்றான். அதுபோலவே சிறிது நாட்களில் எல்லாம் நாவிதரின் முகத்தில் உற்சாகம் குறைந்தது. முன்போல் அவர் நிம்மதியாகவோ, ஸந்தோஷமாகவோ காணப்படவில்லை. மஹாராஜாவிற்கு ஆஶ்சர்யம் தாங்கவில்லை. மந்திரியை அழைத்து, எப்படி உன்னால் அவருடைய நிம்மதியையும், ஸந்தோஷத்தையும் குலைக்கமுடிந்தது என்று கேட்டு ஆஶ்சர்யம் அடைந்தார். அதற்கு மந்திரியோ இது ஒன்றும் பெரிய விஷயமில்லை. ஒரு நாள் அவரை அழைத்து ஒரு லிட்டர் படியில் முக்கால் பாகம் தங்கம் நிரப்பி கொடுத்து விட்டேன். இப்பொழுது அவரது கவலையெல்லாம், அந்த லிட்டர் படி முழுக்க தங்கம் ஸம்பாதிக்கவேண்டும் என்பது தான். அது அவருடைய ஆயுட்காலத்திற்குள் முடியப்போவதில்லை. ஆகவே இனி வாழ்நாள் முழுவதும் அவர் நிம்மதியாக இருக்கப் போவதில்லை என்று தெரிவித்தார்.

ஆகவே, ஒருவருக்கு நிறைய பணம் ஸம்பாதிக்க வேண்டும் என்ற பேராசை வந்துவிடுமானால், அவர்களுக்கு வாழ்வில் நிம்மதி போய் விடுகின்றது என்றும், இருப்பதை கொண்டு திருப்தியுடன் வாழ்பவன் மஹாராஜாவைக் காட்டிலும் ஸந்தோஷமாக வாழ்வான் என்பதும் இந்த கதையிலிருந்து தெரிய வருகின்றது.


श्री हरि:

குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன், சென்னை - 600 083.

மதுரமுரளி வருடசந்தா

வருட சந்தா - உள்நாடு **Rs.** 60/- வெளிநாடு **Rs.** 300/-

*''குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்''* என்னும் பெயரில் மட்டுமே ரொக்கம் / M.O. / காசோலை / DDஆக தங்கள் பெயர், முகவரி, சந்தா எண், தொலைபேசி எண் உள்ளிட்ட விவரங்களுடன் அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

அனுப்ப வேண்டிய முகவரி:
திரு. V. சங்கரன், மதுரமுரளி,
5/3, MIG Flats, பி.டி. ராஜன் சாலை,
கே.கே.நகர், சென்னை - 600 078.
Phone : 4714327

# பக்தி வேதாந்த ஸ்வாமி ப்ரபுபாதர்

## *அவரது வாழ்க்கையும் ஆன்மீக பணியும்*

பல மேற்கத்திய நகரங்களில், குளிரையும், கூட்டங்களையும்கூட பொருட்படுத்தாது, 'ஹரே க்ருஷ்ணா' இயக்கத்தைச் சேர்ந்த பக்தர்கள் ஆனந்தமாக நாமகீர்த்தனம் செய்துகொண்டு ஆடுவதை இன்றும் காணலாம். இவர்கள் வெள்ளை நிறத்திலோ அல்லது காஷாய நிறத்திலோ ஆன வேட்டி, சேலைகளை உடுத்தி, பேருவகையுடன் ஜால்ராக்களை தட்டி, கரங்களை உயர்த்தி, பொதுமக்களின் முன்னிலையில் ஸ்ரீ க்ருஷ்ணரின் கீர்த்தியை பாடுவார்கள். ஸகல தர்மங்களும் நலிந்து, கலிகோர தாண்டவம் ஆடும் இக்காலத்தில், பெரும்பாலும் இளைஞர்களையே கொண்ட குழு, இப்படி லஜ்ஜையைவிட்டு நாமகீர்த்தனம் செய்யும் காட்சி, காண்பவர்களை பரவசமடைய செய்கிறது. இப்படியும் சிலர், ஸம்ஸார ஸாகரத்தில் உழலாது, கண்ணனிடம் ஶரணடைந்ததை பார்ப்பதற்கு ஆனந்தமாகவும் ஆச்சரியமாகவும் தான் இருக்கிறது!

ஒரு ஒழுக்கமான வாழ்க்கை நெறியை பின்பற்றாமல், ஒருவரால், ஸ்ரீ பக்தி வேதாந்த ஸ்வாமி ப்ரபுபாதர் நிறுவிய 'ஹரே க்ருஷ்ணா' இயக்கத்தில் முழு அங்கத்தினராக ஆக இயலாது. ஸ்ரீ ப்ரபுபாதர் தன் சிஷ்யர்களை, ஒரு சில அடிப்படை வாழ்க்கை முறைகளை பின்பற்றுமாறு வலியுறுத்தினார். தகாத ஸ்த்ரீ-புருஷ தொடர்பு இல்லாமல் இருப்பது, சூதாட்டத்தை தவிர்ப்பது, 'ஹரே க்ருஷ்ண' மஹாமந்த்ரத்தை தவறாது ஜபிப்பது போன்றவைகளே அவர் வலியுறுத்தியவைகளாகும்.

'ஹரே க்ருஷ்ணா' இயக்கம், வைஷ்ணவ பக்தி ஸித்தாந்தத்தையே அடிப்படையாக கொண்ட இயக்கமாகும். ஸ்ரீ ப்ரபுபாதரின் ஆன்மீக பரம்பரையைப் பற்றிச் சொல்லவேண்டுமென்றால், வங்காள தேசத்தில், 16ஆம் நூற்றாண்டில் நிலவிய பக்திமார்க்கத்தையே அவலம்பித்து செயல்படுகிறது என்று கூறலாம். பக்திமார்க்கத்தை உத்தாரணம் செய்ய, ஸ்ரீ சைதன்யமஹாப்ரபு (1486-1534), ஒரு முக்கியமான காலகட்டத்தில் தோன்றி, பாரத தேசத்தின் வரலாற்றில் ஒரு அரிய ஆன்மீக முன்னேற்றத்தை ஏற்படுத்தினார். ஜாதி, மத வேறுபாடு பாராட்டாது, எல்லாரையும் தன் ஸங்கத்தில் சேர்த்துக்கொண்டார். ஸ்ரீ க்ருஷ்ண பக்தி தழைத்தோங்க அரும்பாடுபட்டார். ஸ்ரீ க்ருஷ்ணசைதன்யர், ஸ்ரீ

க்ருஷ்ணரையே கடவுளாக கருதியதால், அவர், குழுவாக, ஸத்ஸங்கமாக, பகவந்நாம ஸங்கீர்த்தனம் செய்வதையே ஊக்குவித்து, அதையே முக்கிய வழிபாட்டுமுறையாக போதித்தார். இப்படி நாமஸங்கீர்த்தனம் செய்யும் எவரும், களங்கமற்ற வாழ்கை முறையை மேற்கொண்டால், உயர்ந்த ஸ்ரீக்ருஷ்ண பதத்தை அடைவார்கள் என்பது உறுதியன்றோ!

1896ஆம் ஆண்டு, செப்டம்பர் முதல் தேதி, முன்னொருகாலம் ஆங்கில ஆட்சியில் தலைநகராகத் திகழ்ந்த கல்கத்தா நகரில், அபய சரண்டே என்னும் நாமதேயத்துடன், ஸ்ரீப்ரபுபாதர் தோன்றினார். குழந்தையின் ஜாதகத்தை பார்த்த ஒரு ஜ்யோதிடர், அக்குழந்தை, 70 வயதில் மேல்நாடுகளுக்கு செல்வதோடல்லாமல், அங்கு நம் தர்மத்தை நிலைநாட்டி, 108 கோயில்களை தோற்றுவிப்பாரென கூறினார்.

அவரது தந்தையார், அன்பே உருவானவர். ஒரு துணி விற்பனையாளராக திகழ்ந்தார். அந்த உத்தம வைஷ்ணவர், அபயருக்கு க்ருஷ்ண ப்ரேமை வளருமாறு ஜாக்கிரதையாக வளர்த்தார். அபயரின் தாயும் ஆன்மீக சிந்தையுடைவராக திகழ்ந்ததால், அவரது குழந்தை பருவம், பிற்காலத்தில் ஆன்மீக விழிப்பு ஏற்படுவதற்கு ஹேதுவாக அமைந்தது. மிக சிறிய வயதிலேயே ம்ருதங்கம் வாசிப்பதில் தேர்ச்சி பெற்றார், ஸ்ரீ அபயர். குழந்தை அபயர், பகவந்நாமகீர்த்தனம் செய்ய கற்றுக்கொண்டார். அவரது குழந்தைப் பருவம் மகிழ்ச்சிகரமாகவே கழிந்ததாகத் தெரிகிறது. அவர், ஸ்காடிஷ் சர்சஸ் கல்லூரியில் ஆங்கில மொழி தேர்ச்சி பெற்றார். அவரது தந்தையார், அபயரின் திருமணத்திற்காக ஏற்பாடு செய்தார். ஒரு வணிகரின் மகளை, அபயர் மணம் புரிந்தார். ஆனாலும், கல்லூரி படிப்பு முடியாததன் காரணத்தால் இருவரும் சேர்ந்து வாழவில்லை.

ஆங்கில ஆட்சியை முறியடிக்க, இந்திய தேசிய படையை திரட்டிய சுபாஷ் சந்திரபோஸ், அபயரின் பள்ளியில் அவரது ஸக மாணவராக திகழ்ந்தார். போஸ் தன் ஸக மாணவர்களை விடுதலை போராட்டத்தில் சேர தூண்டினார். அபயர், போஸின் விடுதலை இயக்கத்தின் நோக்கை பாராட்டினாலும் அரசியலில் ஈடுபட அவரது மனம் இடம் கொடுக்கவில்லை. அபயர், மஹாத்மாகாந்தியினால் மிகவும் கவரப்பட்டார். பகவத்கீதையின் ஞானத்தால் முதிர்ச்சியுற்று, பாவனமான வாழ்க்கை முறையை மேற்கொண்ட மஹாத்மா காந்தியடிகள், அவரது மனதில் அழியாத ஒரு பாதிப்பை ஏற்படுத்தினார். அக்காலத்தில் காந்தியடிகள், இந்திய மாணவர்களை ஆங்கில பள்ளிகளில் படிப்பதை

தவிர்க்குமாறு கோரிக்கைவிட்டிருந்தார். இப்படி படிப்பதால், மனதில் அடிமைதளம் அதிகரிக்குமென்பதே அதன் காரணம். அபயரும், தன் கல்லூரி படிப்பை 1920ஆம் ஆண்டு முடித்த பின்பு, ‘டிப்ளமோ’ பட்டத்தை ஸ்வீகரிக்க மறுத்துவிட்டார்! இதனால் கொஞ்சம் துயருற்றாலும், அவரது தந்தை இச்செயலை கண்டிக்கவில்லை. இதன்பின்பு ஒரு அலுவலகத்தில் அபயருக்கு ஒரு மேலாளர் பதவியும் வாங்கி கொடுத்தார்.

அபயர், தன் ஆன்மீக குருவான ஸ்ரீ பக்தி ஸித்தாந்த ஸரஸ்வதி தாகூராவை 1922ஆம் ஆண்டு சந்தித்தார். அவரது குரு, ‘‘ஏன் ஸ்ரீசைதன்யரின் உபதேசங்களை உலகமெங்கும் பரப்பவில்லை?’’ என்று கேட்டதற்கு, அபயர், ஆங்கில ஆட்சியில் இதை செய்ய இயலாதென்றும், இந்தியா முதலில் விடுதலை அடையவேண்டும் என்றும் கூறினார். இதற்கு, அவரது குரு, ஸ்ரீக்ருஷ்ணரின் தொண்டு, இந்திய அரசியல் சரியாகும்வரை காத்திருக்க வேண்டுமென்பதில்லை என கூறினார். தேசத்தையாளும் அரசுகள் யாவும் ஸாஸ்வதமற்றதாகும். ஸ்ரீக்ருஷ்ணரின் பதமே ஸாஸ்வதமாகும். உண்மையான பொதுத்தொண்டு, ஸாஸ்வதமற்ற நோக்கங்களையும் தாண்டி, ஒரு மனிதனின் ஆத்ம வாழ்க்கைக்காக தயார் செய்யுமாறு அமைந்து, பகவானுடன் அவனது பிணைப்பை ஸ்திரப்படுத்தும்படி இருக்கவேண்டும் என்றும் கூறினார்.

இந்த சந்திப்பின் பிறகு, அபயருக்கு விடுதலை இயக்கம் தற்காலிகமான ஒரு நிகழ்ச்சி என்று உறுதியாக தோன்றிவிட்டது. அந்த இரவே, தாகூராவை, அபயர் தன் குருவாக ஏற்றுக்கொண்டார். ஆனாலும் 1932ஆம் ஆண்டில்தான் அவருக்கு தன் ஸத்குருவிடமிருந்து உபதேசம், கிட்டியது. தன் ஸத்குருவின் ஆணைக்கு ஏற்ப, தானும் மத ப்ரச்சாரத்தில் இறங்கவேண்டும் என்ற ஆவல் ஸ்ரீ அபயருக்கு, மேலோங்கியது. ஆனால் அவரது பத்னிக்கு ஆன்மீகத்தில் நாட்டமிருந்தபோதும் இதற்கு அவர் உடன்பட இல்லை.

மருந்து விற்பனை செய்யும் விற்பனையாளரான அவருக்கு பலமுறை வட இந்தியா முழுவதும் பயணம் மேற்கொள்ள வேண்டியிருந்தது. அப்பொழுதெல்லாம் அவருக்கு, தான் செல்வந்தனானால், தன் தனமனைத்தையும் தன் ஸத்குருவின் உபதேசங்களைப் ப்ரசாரம் செய்வதற்காகவே செலவிடவேண்டும் என்று தோன்றும். ஒருநாள் அபயருக்கு தன் குருவிடமிருந்து ஒரு கட்டளை கிடைத்தது. எப்பொழுதாவது பணம் கிட்டுமாகில் புத்தகங்கள் ப்ரசுரம் செய்ய

வேண்டும் என்பதே அந்த ஆணை. இது அபயரின் மனதில் ஆழமாக பதிந்துவிட்டது.

தன் மனைவி, குழந்தைகளை கல்கத்தாவில் அவர் பராமரித்தாலும் அவர்களுடன் வாழ, அபயருக்கு சிறிதும் விருப்பமில்லை. மருந்துகளின் விற்பனையிலும் அவரது மனம் செல்லவில்லை. ஆன்மீக ப்ராசாரத்தையே அவர் மனம் நாடியது. அலஹாபாத்திலிருந்த தன் வணிக பொறுப்புகளை தன் மகனிடம் ஒப்படைத்துவிட்டு, ஜான்ஸியில் ஒரு ஆன்மீக இயக்கத்தை ஏற்படுத்த முயன்றார். ஒரு நாள் அவருக்கு ஒரு தந்தி வந்தது. அதில் அவரது அலுவலகத்தை தொழிலாளர்கள் கொள்ளையடித்துவிட்டதாகவும், அவரது பணத்தையும் மருந்துகளையும் சூறையாடிவிட்டதாகவும் செய்தி இருந்தது. ஒரு லௌகீக மனிதனுக்கு இதை கேட்டவுடன் ஸாதாரணமாக ஏற்படும் கோபம், சோகம் போன்ற எந்த உணர்ச்சிகளும், அபயருக்கு ஏற்படவில்லை. முதலில் மௌனமாக இருந்துவிட்டு, பிறகு ''ஒரு உண்மையான பக்தனின் உலக வெற்றிகளை க்ருஷ்ணன் தன் பரமகருணையால் முறியடிப்பான்'' என்று பாகவத ஸ்லோகத்தை சொல்லி சிரித்துவிட்டார்! ஒரு நண்பர், அபயரை அலஹாபாத் திரும்ப தூண்டியபோது, தன் வாழ்க்கையில் இருந்த ஒரு பெரிய பந்தம் முறியடிக்கப்பட்டதாகவும், இனி தன் வாழ்க்கை ஸ்ரீ ராதாக்ருஷ்ணரை ஆச்ரயித்தே இருக்கும் என்று கூறிவிட்டார்.

அபயருக்கு தன் குடும்பத்துடன் உள்ள உறவு நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே போனது. அவரது மாமனார் தன் மாப்பிள்ளை ஸதா பகவானைப் பற்றியே பேசிக்கொண்டிருப்பதாக குற்றம் சாட்டினார். அபயர், தன் கல்கத்தா கடையை பெரிதுபடுத்தினால், அதில் வரும் வருமானம் அனைத்தையும் அவர் குடும்பத்தினர் கேட்டு வாங்கிவிடுவார்கள் என்பதை உணர்ந்தார். அப்படி கொடுத்தாலும், அவரது குடும்பத்தினர், ஆன்மீக வாழ்க்கையில் அதிக நாட்டம் உடையவர்களாக இருக்கவில்லை. அவர்கள், ஒரு தனியறையில் தேனீர் அருந்துவார்கள். அபயர், தன் மனைவி, தன் ப்ரசாரத்திற்கு உடன்படமாட்டாள் என்று நன்றாக புரிந்து கொண்டார்.

அபயர் பல முறை தன் மனைவியை தேனீர் அருந்தக்கூடாது என்று ஆணையிட்டும், அவள் அதற்கு உடன்படவில்லை. ஒரு முறை அவர் தன் மனைவியிடம், தான் வேண்டுமா, தேனீர் வேண்டுமா என்று

கேட்டதற்கு, அவர் மனைவி ''அப்படியென்றால், உங்களைதான் நான் விடவேண்டியிருக்கும்!'' என்று கூறிவிட்டாள்.

ஒருநாள், அபயரது மனைவி, அபயரின் பாகவத புத்தகத்தை தேனீர், பிஸ்கட்டுகள் வாங்குவதற்கு விற்றுவிட்டார். அபயர் தன் இல்லம் திரும்பி, பாகவதத்தை தேடியபோது, நடந்ததைகேட்டு அதிர்ச்சியுற்றார். அதுவரை பொறுத்திருந்த அபயர், அன்று முதல் தன் குடும்பத்தையும் வணிகத்தையும் அறவே துறந்தார். இந்த நிகழ்ச்சி, அவர் குடும்பத்துடன் இருந்த இறுதி பந்தத்தையும் பிளக்கச்செய்தது.

அபயருக்கு 1950ஆம் ஆண்டு முதல், ஒரு பத்து வருடங்கள் மிக கடினமானவைகளாக திகழ்ந்தன. சிலகாலம் தில்லியில் ஒரு ஆஶ்ரமத்தில் அவர் தங்கினார். பிறகு மறுபடியும் தனித்து திரிய ஆரம்பித்தார். பல கோயில்களிலும், மடங்களிலும், பக்தர்களின் இல்லங்களிலும் அவர் தங்கி காலத்தை கழித்தார். உணவு, உடை, இருப்பிடம் இவைகூட சரிவர கிடைக்காமல் அவதியுற்றார்.

ஆனாலும் சோர்வடையாமல், தன் பொழுதை, எழுதுவதிலும், ப்ரசுரத்திலும் பெரும்பாலும் கழித்தார். தன் கட்டுரைகளை ப்ரசுரம் செய்ய தன வசதி தேவைப்பட்டதால், தன் கட்டுரைகளையும் தன் பணியைப் பற்றியும் பல ப்ரமுகர்களுக்கு எடுத்துரைத்தார். இதனால் அவ்வளவாக பணம் சேராவிடிலும், 'Back to godhead' என்ற பத்திரிக்கையை மீண்டும் தொடர்ந்தார். (1944ஆம் ஆண்டு இதை ஆரம்பித்து, இடையில் நிறுத்த வேண்டியதாயிற்று) இந்த அழகிய பத்திரிக்கை, ஶ்ரீக்ருஷ்ணரை மையமாகக் கொண்டு, பல சித்திரங்களும், கட்டுரைகளும் கொண்டு விளங்கியது. இந்த பத்திரிக்கையின் பிழைதிருத்தத்தை தானே செய்வதோடு நில்லாமல், தில்லியில் பல இடங்களுக்கு கால்நடையாகச் சென்று, இதை விற்கவும் செய்தார்! பல ப்ரதிகளை இந்தியாவிலும், வெளிநாட்டிற்கும் இலவசமாக தபாலிலும் அனுப்பினார். அவரது கட்டுரைகள், அப்பொழுது நிலவிய லௌகீக மோகத்தை கண்டித்த வண்ணம் இருந்தது. பகவானின் மேன்மையை அனுசரித்து வாழும் ஒரு புதிய வாழ்க்கை நெறியை அவர் போதித்தார்.

அபயர், ஶ்ரீ ப்ருந்தாவனம் சென்று, அங்கு தன் இலக்கிய பணியை தொடர ஆவலுற்று, ஶ்ரீவனம் சென்றடைந்தார். அங்கு அவருக்கு ஏற்பட்ட ஒரு கனவு அவரது தொண்டு புரியவேண்டுமென்ற வேட்கையை

பன்மடங்கு அதிகரித்தது. 1936ஆம் ஆண்டு பூதவுடல் நீத்த அவரது ஸத்குரு, ஒருநாள் ஸ்ரீவனத்தில் அபயரது கனவில் தோன்றி, அபயரை ஸன்யாஸம் மேற்கொள்ளும்படி ஆணையிட்டார். அந்த ஆணை, அபயர், தான் மேற்கத்திய நாடுகளில் ஸ்ரீக்ருஷ்ண பக்திமார்க்கத்தை பரப்பும்படி முன்பே பெற்ற ஆணையை வலியுறுத்துவதாக கருதி, ஸன்யாஸ தர்மத்தை எடுத்துக்கொண்டார்.

"Scindia Steamship line' என்ற கப்பல் கம்பெனி, ப்ரபுபாதரை இலவசமாக அமெரிக்கா செல்ல ஏற்பாடு செய்தது. கப்பலில் ப்ரபுபாதருக்காகவே காய்கறிகளும், பழங்களும் ஏற்பாடு செய்தனர்.

ஆக, பல வருடங்களாக தன்னை தயார் படுத்திக்கொண்டபின், ஸ்ரீ ப்ரபுபாதர் இந்தியாவை விட்டு, நியுயார்க் நகரத்திற்கு ஆகஸ்டு 1965ஆம் ஆண்டு புறப்பட்டார். முதன்முறையாக தன் தாய்நாடுவிட்டு சென்ற ப்ரபுபாதரின் வயது அறுபத்து ஒன்பது! அவர் அமெரிக்காவை அடைந்தபோது அவரிடம் விஞ்சியது ரூபாய் நாற்பது மட்டுமே! உலக ரீதியில் அவரிடம் செல்வம் குறைந்து இருந்தாலும், கண்ணனிடம் கொண்ட களங்கமற்ற பக்தியின் காரணத்தால் அவர் அகம் பக்தி என்னும் செல்வத்தால் செழித்திருந்தது.

நியூயார்க்கில் ப்ரபுபாதர், ஒரு பழைய மாடியில், ஆன்மீக வகுப்புகளை நடத்த ஆரம்பித்தார். கீழே தன் கைப்பட ஒரு நோடீஸ்ஸை தன் தபால் பெட்டியருகே மாட்டினார். 'International Society for Krishna Consciousness' என்று அந்த நோடீஸ் பறை சாற்றியது. அப்பொழுது இந்த இயக்கம் மிக பெரிய அளவில் செயல்படவில்லை. ஆனால் இப்பொழுதோ, அது பன்மடங்காகப் பெருகி, பல தேசங்களின் உறுப்பினர் கொண்ட க்ருஷ்ண பக்தியால் பந்தப்படுத்தப்பட்ட ஒரு சிறிய உலகமாகவே ஆகிவிட்டது.

மெதுவாக ப்ரபுபாதரின் தொண்டுகள் தெரியவந்தபோது, மேலும் மேலும் பல இளைஞர்கள் அவரது சிறிய குடிலில், காலையிலும், மாலையிலும் நடந்த வகுப்புகள் மற்றும் நாமஸங்கீர்த்தனத்திற்காக குழும ஆரம்பித்தனர். ப்ரபுபாதரும் தன் சிஷ்யர்களுக்கு பாகவத ப்ரவசனங்கள் மூலமும் அதிகாலை உலாவின்போது (Early morning walk) நடக்கும் போதும் கலந்தாலோசனைகள் மூலமும் பாகவத தர்மத்தை போதித்தார்.

அவரது இலக்கிய பணிகளில் மிக குறிப்பிடதக்கதாக, அவர்

பாகவதத்தை மொழிபெயர்த்ததையும் அதற்கு உரை எழுதியதையும் கூறலாம். இந்த பணியை அவர் 1959ஆம் ஆண்டு ஆரம்பித்து, 1965ஆம் ஆண்டு, முதல் ஸ்கந்தத்தை மூன்று புத்தகங்களாக வெளியிட்டார். மொத்தம் 70 புத்தகங்களை இயற்றினார், ஸ்ரீ ப்ரபுபாதர். இப்பொழுது இவை 50க்கும் மேலான மொழிகளில் வெளிவந்துள்ளன. இப்படியாக அவரது இலக்கிய பணி அப்ராக்ருதமானதாகவே திகழ்கிறது.

அவரது உரைகள், (பகவத்கீதை உட்பட), எல்லாம் ப்ராசீனமான வைணவ க்ரந்தங்களை ஒட்டியே அமைந்துள்ளன. அவர் ப்ராசீனமான தத்துவ மணிகளை, இந்நாளில் வாழும் மக்களுக்கு ஆன்மீகம் எளிதில் படித்துப் புரிந்து கொள்ளுமாறு செய்தார். அவர் வெளியிட்ட பகவத்கீதையின் உரை, மேல் நாடுகளில், மற்ற உரைகளைக் காட்டிலும் ப்ரபலமாக திகழ்கிறது. இவைகளைத் தவிர, "Beyond Birth and Death" (பிறப்பு இறப்பிற்கு அப்பால்), "The Science of self realisation", Search for liberation, Path of perfection போன்ற க்ரந்தங்களையும் செய்தார்.

"Civilization and Transcendence" என்ற புத்தகத்தில் அவர் கலிகால மக்களின் அவலநிலையைப் பார்த்து மனம் வருந்துகிறார். நாமெல்லாரும் துரதிருஷ்டவசமாக கலிகாலத்தில் வசிக்கிறோம். கலிகாலமோ சண்டை, சச்சரவு, போலித்தனம் போன்றவைகளுக்கு பேர்போனது. பாகவதத்தில் சொல்லியதுபோல, பக்தி, ஸத்தியம், தூய்மை, பொறுமை, ஞாபகசக்தி, உடலாற்றல், ஆயுள், இரக்கம் போன்றவைகள் நலிந்துபோகும் கலியில், நாம் அனைவரும் வசிக்கின்றோம். கொஞ்சம் ஹாஸ்யமாக அவர் கேட்கிறார். ‘‘நாய் இங்கும் அங்கும் தன் நான்கு கால்களில் ஓடுகின்றது. நீயோ, இதையே நான்கு சக்கரங்களால் செய்கிறாய்! இதுவோ வளர்ச்சி? விலங்குகளும், பறவைகளும் ஒரு சில அடிப்படைத் தேவைகளை பூர்த்திசெய்ய யத்தனிக்கின்றன. உணவு எங்கே? மைதுனம் எங்கே? வசிக்க இடம் எங்கே? தன்னை எப்படி காத்துக் கொள்வது?... என்று அலைகின்றன. ஆனால், வருந்ததக்க விஷயம் என்னவென்றால், மனிதனும் இப்படி அல்லவா வாழ்க்கையை நடத்துகிறான். மனிதனும் தன் வாழ்க்கையை எப்படி வீணாக்கிக் கொள்கிறான்’’ என்கிறார்.

ஸ்ரீ ப்ரபுபாதர், ஆத்ம-ஞானத்தை அடைவதே வேதத்தை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கைமுறையின் குறிக்கோளாகும்

என்கிறார். இப்படிப்பட்ட வாழ்க்கை, ஒரு அறிவுள்ள மனிதன் முன் ஜன்மங்களில் அடையமுடியாத ஆத்ம-ஞானத்தை இந்த ஜன்மத்திலாவது அடைவதற்காகவே ஆகும் என்கிறார்.

ஸ்ரீ ப்ரபுபாதர், ஒரு ஞானியின் குணங்களை அழகாக கொண்டாடுவார். ஒரு ஞானி எப்போதும் ஆனந்தத்திலே திளைப்பான்; அவனுக்கு துக்கம், கவலை போன்றவைகள் கிடையாது. உலகிலேயே மிக்க ஏழையாக இருந்தாலும், தன்னை ஏழையாக கருதி வருத்தப்படமாட்டான். நாம் நம்மை ஏழை, பணக்காரன் என்று ஏன் கருதுகிறோமென்றால், நாம் நம்மை இந்த ஸ்தூல ஶரீரமாக கருதி, நம்மிடம் உள்ளவைகளை நமக்கு சொந்தமாக கருதுகிறோம். ஆனால், இப்படிப்பட்ட ஒரு கருத்தை பாராட்டாதவனுக்கு, பணம் அல்லது மற்ற சொத்துக்களின் பாதிப்பு இருக்கவே இருக்காது. அவன், தனக்கு எந்த பொருளாலும், லாபமும் இல்லை, நஷ்டமும் இல்லை என்பதை நன்கு உணர்கிறான். அவன் மற்றவர்களை ஏழை-பணக்காரன், படித்தவன்-படிக்காதவன், அழகியவன்- அழகற்றவன் என்றெல்லாம் பார்ப்பதில்லை. அவன், ஸம த்ருஷ்டியுடன் எல்லாவற்றையும் பார்ப்பான்; மாயையின் சாயையான சுகம், துக்கம், சீதோஷ்ணம் போன்ற இரட்டைகளுக்கும் அப்பாற்பட்டு செயல்படுகிறான். எல்லா வஸ்துக்களையும் ஸ்ரீ க்ருஷ்ணனின் அங்கங்களாக பார்க்கும் அவன், அவைகளில் உள்ள க்ருஷ்ண சைதன்யத்தை அவைகளுக்கு உணர்த்த உதவுவான்.

ஸ்ரீ ப்ரபுபாதர் நூற்றுக்கும் மேற்பட்ட கோயில்களை முப்பத்தாறு நாடுகளில் நிறுவினார். கோயில் நிர்வாக கைங்கர்யம் செய்யும் முறையை தானே தன் சீடர்களுக்கு எடுத்துரைத்தார். உதாரணத்திற்கு, கோயிலை சுத்தம் செய்யும் முறை, உத்ஸவங்கள் கொண்டாடும்முறை, நந்தவன கைங்கர்யம், கோயில் கணக்கை நிர்வாகம் செய்தல், கோயிலுக்கான நிலபுலன்களை வாங்குதல் போன்றவைகளை தானே தன் சீடர்களுக்கு எடுத்துரைத்தார். அவர் எல்லாவற்றிலும் முழுமையையும், சரியான தரத்தையும் எதிர்பார்ப்பார். ஸ்ரீக்ருஷ்ணனின் வண்ண வண்ண அர்ச்சாவதாரங்களை ஒவ்வொரு கோயிலிலும் நிறுவினார். அர்ச்சாவதாரத்தின்முன் நிற்கும்போது அவர் அங்கு கல்லையோ, கட்டையையோ காணாது, அகிலாண்டகோடி ப்ரஹ்மாண்ட நாயகனான ஸ்ரீ க்ருஷ்ணனையே கண்டு கண்ணீர் மல்க, பகவானை வணங்கி நிற்பார்.

ஸ்ரீ ப்ரபுபாதர் தன் பூதவுடலை நவம்பர் 14ஆம் தேதி 1977ஆம் ஆண்டு நீத்தார். அவர் 'ISKCON' என்னும் உலகளாவிய இயக்கத்தை பரிசாக தந்துவிட்டே சென்றுள்ளார். அவரது பணிகளில் வேதத்தைச் சார்ந்து அவர் நிறுவிய ஆரம்ப மேல்நிலைபள்ளிகள், குறிப்பிடதக்கவைகளாகும். இந்தியாவில் பல கலாசார மையங்கள் ஏற்படவும், அவர் தூண்டுதலாக இருந்தார்; மாயாபூர் என்ற இடத்தில் ஒரு ஆன்மீக நகரம் எதிர்காலத்தில் உருவாக உள்ளது; இதற்கும் ஸ்ரீ ப்ரபுபாதரின் தூண்டுதல் காரணமாகும். ஸ்ரீலப்ரபுபாதா நினைவாலயம், ப்ருந்தாவனத்தில் உள்ளது. இது இதய பூர்வமாக பகவானுக்கு தொண்டு செய்த ஒரு தூய ஆன்மாவிற்கான பாராட்டு சான்றாகத் திகழ்கின்றது.

உலகனைத்திலும் உள்ள ஆன்மீக ஸாதகர்கள், ப்ரபுபாதரிடம் இயல்பாக ஈர்க்கப்பட்டனர். அவரை ஒரு ஆன்மீக தலைவராகவே கொண்டனர். புலனின்பத்தையே நாடும் இக்காலப்போக்கின் கோரத்தைக் கண்டு விரக்தியடைந்தவர்களுக்கும், ஸ்ரீ ப்ரபுபாதரின் வாழ்க்கை நெறி தத்துவம் ஒரு விடிவெள்ளியாக தெரிந்தது. ஸ்ரீ ப்ரபுபாதர் இவர்களுக்கு தூய்மையான, க்ருஷ்ண ப்ரேமையுடன் கூடிய ஒரு புதிய வாழ்க்கை பாதையை காட்டிச் சென்றார். ப்ரபுபாதரின் தொடர்பு பெற்ற அன்பர்களின் வாழ்க்கையில் பல அசாதாரணமான திருப்பங்கள் நேர்ந்ததை காணலாம். உதாரணத்திற்கு புலால் உண்பவர்கள், ஸுத்த சைவர்களானார்கள். மொடாகுடியர்களும், போதை மருந்துக்கு அடிமையானவர்களும் அந்த பழக்கத்தை வெட்டியெறிந்தனர்; நாஸ்திகர்கள் க்ருஷ்ண நாமம் பாடும் பக்தர்களானார்கள்! கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று இருந்தவர்களுக்கு, ஸ்ரீக்ருஷ்ணஸேவையே வாழ்க்கையின் குறிக்கோள் என்பதை எடுத்துக்காட்டினார். ஆகவே, இந்தியாவில் உதித்த இந்த ஞானி, மேல்நாடுகளிலும் மற்றும் பல இடங்களிலுமுள்ள மக்களின் வாழ்க்கையில் ஒரு புத்தொளி தோற்றுவித்து, ஆனந்தமான வாழ்க்கையை அவர்கள் வாழ ஹேதுவாகயிருந்தார் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

- ராமு

## ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 51

சகலமும் விழுங்கும் கதிரொளியினமன
சலச மலர்த்தியிடு அருணாசலா

உலகில் ஜீவன்முக்தி ஸ்திதியை அடைந்த ஞானிகள் எப்பொழுதும் ஸமாதி அவஸ்தையிலேயே திளைத்து எந்த காரியமும் செய்யாமல் ஒரு சிலைபோல் அமர்ந்திருப்பார்கள் என்ற ஒரு தவறான அபிப்ராயம் பலருக்கும் உள்ளது. ஆனால் அத்வைத மதத்தை ஸ்தாபித்த ஜகத்குருவான ஆதிஶங்கரபகவத்பாதாள் அவர்களே, தன்னுடைய 32 வயதிற்குள் ஆஸேத் ஹிமாசலம் ஸஞ்சாரம் செய்து, துர்மதங்களை கண்டித்து, வைதீக மடங்களை ஸ்தாபித்து, அநேக க்ரந்தங்கள் செய்து லோக உபகாரமாக ஓயாமல் காரியம் செய்து வந்ததையும் நாம் அறிகின்றோம். அத்தகைய உயர்ந்த நிலையை அடைந்த ஞானிகளுக்கு காரியங்களில் ஈடுபடுவதால், அவர்களுடைய ஸ்திதிக்கு எந்த பாதிப்பும் இல்லை. அவர்கள் காரியம் செய்தும் செய்யாதவர்களே. அவர்கள் செய்கின்ற காரியமோ அவர்களுக்கு அன்னியமாக இல்லை. சில ஞானிகள் காரியம் செய்வதற்கும், சிலர் சும்மா இருப்பதற்கும் அவர்களுடைய ஸ்திதியில் உள்ள வித்தியாசம் காரணம் அல்ல. ஈஶ்வரனுடைய ஸங்கல்பமே காரணம்.

சூரியன் வருவதும் போவதுமாய் உள்ள மேகக்கூடங்களை எப்படி ஸாக்ஷி மாத்திரமாய் பார்த்துக்கொண்டு இருக்கிறதோ, அதுபோல் ஜீவன்முக்தனான ஞானி தன் முன் ப்ராரப்த வஸாத் நடக்கும் விவஹாரங்களை எந்த விதமான ராகத்வேஷமும், பற்றுதலுமில்லாமல் நடத்திக்கொண்டு இருப்பான். ஏனெனில் எதிலும் அவன் மனதானது ஸம்பந்தப்படுவதில்லை. அவனுக்கு மனது என்பதே இல்லை.

சூரியன் உதயமானவுடன் தாமரையானது தானே மலர்கின்றது. சேவல் தானே கூவுகின்றது. உழவர்கள் தானே கலப்பையை எடுத்துக்கொண்டு விவசாயம் செய்ய கிளம்புகின்றனர். சூரியன் யாரையும் மேற்படி காரியங்களை செய்வதற்கு ப்ரேரணை செய்யவில்லை. சூரியன் உதயமானவுடனே, அவனுடைய ஸன்னதி மாத்திரத்தில் அவரவர்கள் அவரவர்களுடைய காரியங்களை செய்ய

ஆரம்பிக்கின்றனர். சூரிய ஒளியில் சிலர் பாகவதம் படிக்கின்றனர். வேறு சிலரோ சூதாடுகின்றனர். வேறு சிலரோ கொலை, கொள்ளைகளில் ஈடுபடுகின்றனர். சூரிய ஒளியில்லாத பக்ஷத்தில் மேற்படி காரியங்களை நடத்த இயலாது. ஆனால் அதே ஸமயத்தில் மேற்படி காரியங்களை செய்வதற்கு ஆத்ம சைதன்யம்தான் தூண்டுகின்றது என்பது தவறு. ஒருவர் செய்யும் நல்லது, கெட்டது காரியங்களுக்கு ஆத்மா ஸாக்ஷியே தவிர, கர்த்தாவாக ஆகாது. ஆகவே, அவரவர்களுக்கு நடக்கும் காரியங்களுக்கு அவர்களுடைய ப்ராரப்தமே காரணம்.

(தொடரும்)

ஸ்ரீ ஹரி:

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்த்ரா

13, பட்டேல் தெரு, நேரு நகர்,

குரோம்பேட்டை, சென்னை - 600 044.

## அகண்ட நாம ஸங்கீர்த்தனம்

மேற்படி கேந்த்ராவில் தினமும் காலை 6 மணி முதல் 8 மணி வரை, மாலை 7 மணி முதல் இரவு 9 மணி வரையிலும்.

ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி முதல் 10 மணி வரை, மாலை 3 மணி முதல் 6 மணி வரையிலும்

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே ।
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே ॥

நாமகீர்த்தனம் நடைபெறும்.

அனைவரும் மேற்படி நாமகீர்த்தனத்தில் கலந்துகொண்டு ஸகல நன்மைகளையும் அடையும்படி கேட்டுக்கொள்கிறோம்.

# செய்திகள்

அக்டோபர் 10-ந் தேதி முதல் 18-ந் தேதி வரை

சென்னை ப்ரேமிகபவனத்தில் நவராத்ரியை ஒட்டி ஸ்ரீமத் ராமாயண நவாஹ பாராயணமும், ப்ரவசனமும் நடைபெற்றது. தினமும் த்ரிவேத பாராயணமும் நடைபெற்றது.

அக்டோபர் 20-ந் தேதி

விஜயதசமியை ஒட்டி, ஸ்ரீ ஸ்வாமிகள், குரோம்பேட்டை, நேரு நகர் படேல் தெருவில் உள்ள ஸ்ரீமதி வெங்கிலக்ஷ்மி அவர்கள் க்ருஹத்தில் சைதன்யமஹாப்ரபு நாமபிக்ஷாகேந்த்ராவை துவக்கி வைத்தார்கள்.

இந்த கேந்த்ராவில் ஸ்ரீ ஸ்வாமிகள் முன்னிலையில் காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை அகண்ட ''ஹரே ராம'' நாமஸங்கீர்த்தனம் நடைபெற்றது.

# நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

நவம்பர் 7-ந் தேதி — ஐப்பசி ஸ்வாதி

ஸ்ரீ ஸ்வாமிகளின் திருநக்ஷத்ரம். சென்னை ப்ரேமிகபவனத்தில், ஸ்ரீ ஸ்வாமிகளின் ஜயந்தி மஹோத்ஸவம் நடைபெறும்.

தீபாவளி பண்டிகை. ஸ்ரீ ஸ்ரீநிவாஸபெருமாளுக்கு விசேஷ திருமஞ்சனம் நடைபெறும்.

நவம்பர் 20-ந் தேதி — கைசிக த்வாதஶீ

திருமழிசை ஸ்ரீ ஜகந்நாத பெருமாளுக்கு நம் மிஷன் சார்பில் விசேஷ திருமஞ்சனம் அலங்காரம் கட்டளை செய்யப்படும்.

நவம்பர் 22-ந் தேதி — விஷ்ணு தீபம்

சென்னை ப்ரேமிக பவனத்தில் விஷ்ணுதீபம் ஏற்றப்படும்.

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் வர்தந்தி ட்ரஸ்ட்

15A, கோவிந்து தெரு, தி. நகர், சென்னை - 600 017. போன் : 8284026

## ஸ்ரீ க்ருஷ்ண யஜுர் வேத ஜடா பாராயண மஹோத்ஸவம்

இடம் : 'ப்ரேமிக பவனம்',
24, நேதாஜி நகர், ஜாபர்கான் பேட்டை,
சென்னை - 83.

தேதி : 31-10-1999 முதல் 14-11-1999 வரை

### நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| ஞாயிறு 31-10-99 | 6.00 காலை | கணபதி ஹோமம், நவக்ரஹ ஹோமம், ஸ்ரீ வேதவ்யாஸ ஆவாஹன பூஜை, ஆசார்ய வந்தனம் |
| | 8.00 காலை | ஜடாபாராயண ஆரம்பம் (தொடர்ந்து இரவு 8.30 மணி வரை கீழ்கண்டபடி நடைபெறும்) |
| 1-11-99 முதல் 13-11-99 | 7.00-11.00 காலை | பாராயணம் - பாகம் 1 |
| | 3.00-6.00 மாலை | பாராயணம் - பாகம் 2 |
| | 7.00-8.30 இரவு | பாராயணம் - பாகம் 3 |
| ஞாயிறு 7-11-99 | 6.00 காலை முதல் 8.00 வரை | ஸ்வாதி நக்ஷத்திரம்— ஸ்ரீ முரளீதரஸ்வாமிகள் ஜயந்தி உத்ஸவம், ஆயுஷ்ய ஹோமம், ஆவஹந்தி ஹோமம் |
| ஞாயிறு 14-11-99 | 7.00-11.00 காலை | ஜடா பாராயணம் |
| | 8.00 காலை | விசேஷ "ஸ்ரீ ஸுதர்சன ஹோமம்" |
| | 11.30 காலை | ப்ரஸாத விநியோகம் |
| | 3.00-5.00 மாலை | "கல் வைத்த வாரம்" |
| | 6.00 மாலை | வேத வித்வான்களைக் கௌரவித்தல், தக்ஷிணாதானம் |
| | 7.00 மாலை | அக்ஷதாசீர்வாதம், மங்களஹாரத்தி |

மங்களானி பவந்து